**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 246/2017**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 28.10.2025 | | |
| பெயர்: | மதனா<br>(DW–1 Cross con ) | கணவர் பெயர்: | அருண்பாண்டியன் |
| கிராமம்: | அல்லிவிளாகம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 30/2025 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 28.10.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.50)**

1. தாவா சொத்து என்பது எத்தனை அயிட்ட சொத்திற்கு என்றால் 3 அயிட்ட சொத்திற்கு. முதல் அயிட்ட சொத்தின் சர்வே எண் 164/1, 2வது அயிட்ட சொத்தின் சர்வே எண் என்பது 144/7, 144/8, 144/9, 144/10, 144/11 ஆகும். 2வது அயிட்ட சொத்து 7ம் பிரதிவாதியான சிங்காரவேலு வசம் உள்ளதாக நாங்கள் கட்சி நடத்துகிறோம் என்றால் சரிதான். மேற்படி சிங்காரவேலு இந்நீதிமன்றத்தில் தாவா சொத்து சம்மந்தமாக ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும், ஆனால் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது.

2. சர்வே எண் 144/7, 144/8, 144/9, 144/10, 144/11 ல் உள்ள சொத்துக்கள் வாதி சண்முகசுந்தரம் வசம் உள்ளது என்றால் சரியல்ல. தாவா A அட்டவணையில் 3வது அயிட்ட சொத்து யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. ஆனால் எனது முதல் விசாரணையில் எனது தகப்பனார் வசத்தில் உள்ளதாக நான் கூறியுள்ளேன் என்றால் இல்லை, எனது வசத்தில்தான்

உள்ளது, ஆனால் எனது தகப்பனார் சாகுபடி செய்து வருகிறார்.

3. எனது தகப்பனார் சாகுபடி செய்து வருவதற்கான ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா C அட்டவணையில் முதல் அயிட்ட சொத்தான 630 ச.மீ கோயிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். இந்த சொத்தில் தான் எனது வீடும், வாதி சண்முகசுந்தரத்தின் வீடும் உள்ளது என்றால் சரிதான். இந்த கோயில் மனையில் ஜெயக்குமாருக்கு (தகப்பனாரின் சகோதரர்) பங்கு உண்டா என்றால் இல்லை, அவருக்கு தனியாக பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி 630 ச.மீ என்பது சுமாராக 6500 சதுரடி வரும் என்றால் சரிதான்.

4. வாதி 3 அட்டவணையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் எந்தெந்த சொத்துக்கள் உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாவா 'A' அட்டவணை சொத்தை பொறுத்து வாதி பயிர் செய்வதை இடையூறு செய்யக்கூடாது என்று கேட்கப்பட்டுள்ளது. 'B' அட்டவணை சொத்தை விற்கக்கூடாது என்று வாதி பரிகாரம் கேட்டுள்ளார். 'C' அட்டவணை சொத்தை விற்கக்கூடாது என்று வாதி பரிகாரம் கேட்டுள்ளார்.

5. வாதி சண்முகசுந்தரத்திற்கு விவசாயம் தான் பிரதான தொழில் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்பதால் அதை பொறுத்து 1ம் பிரதிவாதி அமிர்தலிங்கம் பாரதீனம் செய்ய முடியாது என்றால் சரியல்ல. தந்தைக்கும் மகனுக்கும் இடையிலான குடும்பத்தகராறில் எனது தூண்டுதலின் பேரில் ஏற்கனவே வாதிக்கு ஆதரவாக கொடுக்கப்பட்ட சொத்துக்களை அவரது தகப்பனார் மற்றவர்களுக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல.

6. C அட்டவணை சொத்துக்கள் அனைத்தும் அமிர்தலிங்கத்தின் தனிப்பட்ட அனுபவத்திலும் வசத்திலும் உள்ளது என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு எழுதிவைக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணமும்,

1ம் பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணமும் வாதி சண்முகசுந்தரத்திற்கு தெரியாது, 2017ம் வருடம் தான் வாதிக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல.

7. A அட்டவணை சொத்துக்கள் அனைத்தும் வாதியின் வசத்திலும் அனுபவத்திலும் தான் உள்ளது, அதை பொறுத்து ஏற்பட்ட ஆவணங்கள் அனைத்தும் செல்லாது என்றால் சரியல்ல. காத்திருப்பு கிராமத்தில் உள்ள புல எண்கள் 296/1 மற்றும் உட்பிரிவுகள் 3,4,5 ஆகியவை வாதிக்கு உரிமையான சொத்துக்கள் என்றால் சரிதான், அந்த சொத்துக்கள் பெயரளவில்தான் வாதிக்கு ஏற்பட்டது, அதில் அவருக்கு உரிமையும் அனுபவமும் இல்லை என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல.

8. வழக்கு சொத்துக்கள் பூர்வீக் சொத்திலிருந்து வந்த காரணத்தால் வாதி அதில் ஒரு கூட்டுரிமையாளர் என்ற அடிப்படையில் அவருக்கு உரிமையுண்டு, அதை பொறுத்து 1,2,3,4 மற்றும் 7ம் பிரதிவாதிகள் சார்பில் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் செல்லாது என்றால் சரியல்ல. மகன் பெயரில் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அந்த ஆவணங்கள் ஏற்பட்டுள்ளதால் அவை செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கில் கோரியபடி தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள பட்டா மாறுதலும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>

<u>மறு விசாரணை இல்லை.</u>

(முடிவு நேரம்– 13.20)